27.11.2024

S.C.No. 21/2024

PW. 8 Tr. திரு. அஜய்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-**

28.08.2023 அன்று மனோஜை நான் மருத்துவமனைக்கு கூட்டி செல்வதற்கு முன்பாக தெப்பகுளம் சந்தில் மனோஜ் படித்தரைக்கு அருகில் கிடந்தானா அல்லது தூரமாக இருந்தானா என்றால் படித்தரைக்கு முன்னால் இருந்தான். அந்த இடத்தில் இருந்து எனது இருசக்கர வாகனத்திற்கு மனோஜ் ஐ யார் கைத்தாங்கலாக கூட்டி வந்தது என்றால் அவருடைய அண்ணன் ராஜகோபால் கூட்டி வந்தார். மனோஜ் இருந்த இடத்தில் எதிரி இருந்தாரா என்றால் இல்லை. நான் ராஜகோபாலையும், மனோஜ்யும் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தேன் என்றால் 8.15 அல்லது 8.30 மணி இருக்கும். மருத்துவமனைக்கு கொண்டு சென்றவுடன் மனோஜ்யை நாங்கள் இருவரும் கைத்தாங்கலாக கூட்டிச் சென்றோமா என்றால் இல்லை. ராஜகோபால் மட்டும் தான் கூட்டிச் சென்றார். ஆஸ்பத்திரியில் முன்னால் இருக்கும் படி வழியாக தான் கூட்டிச் சென்றாரா என்றால் ஆமாம். நான் மருத்துவமனைக்கு உள்ளே செல்லவில்லையா என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு சென்று மனோஜ்க்கு சிகிச்சை அளிக்கும் வரையில் அங்கேதான் இருந்தேனா அல்லது வீட்டிற்கு சென்று

விட்டேனா என்றால் அங்கேதான்இருந்தேன். அங்கு சென்று விட்டு எவ்வளவு நேரத்தில் நான் கிளம்பினேன் என்றால் உள்ளே சென்ற 5 நிமிடத்தில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். அதற்கு பிறகு 10, 15 நிமிடம் இருந்தேன், கிளம்பிவிட்டேன். நான் கூட்டிச் சென்றதாக சொல்லும் இரு சக்கர வாகனம் என் வாகனம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடையதுதான். R.C. புத்தகத்தில் என் பெயர்தான் உள்ளதா என்றால் இல்லை எனக்கு முன்னால் வைத்திருந்தவர் பெயர் உள்ளது. மருத்துவமனையில் மனோஜ் யை இறக்கி விடும்போது அவருடைய ஒரு கால் செருப்பு இருந்ததா அல்லது இரண்டு காலில் இருந்ததா என்றால் அவர் காலில் செருப்பே இல்லை. நான் மருத்துவமனையில் மனோஜ் யை இறக்கிவிடும்போது என்னிடமோ, ராஜகோபாலிடமோ ஏதாவது பேசினாரா என்றால் இல்லை. மயக்கத்தில் இருந்தார். 8.30 மணிக்கு மனோஜ் யை ஆஸ்பத்திரியில் இறக்கிவிட்ட விவரத்தை போலீசார் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொன்னேன். மனோஜ் இறந்துவிட்டான் என்ற விவரத்தை நான் யாரிடம் சொன்னேன் என்றால் நான் யாரிடமும் சொல்லவில்லை. மனோஜ் ஐ எதிரி குத்தியதாக நான் சொல்வது போல எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் நான் அந்த இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் நான் ராஜகோபாலுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும்சரியல்ல. எதிரியை பழிவாங்கும் எண்ணத்தில் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.